(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 8 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, யூலை 10, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0018/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்று உள்ளவாறு அபிவிருத்தி லொத்தர் சபையில் உள்ள பணியாளர் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையையும்,

(ii) கடந்த 5 வருடங்களில் ஊழியர் ஒருவருக்கான செலவையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) விளம்பர வேலைகள் யாருக்கு வழங்கப்பட்டன என்பதையும்,

(ii) விளம்பரங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களையும் பயன்படுத்தப்பட்ட முகவர்களையும்,

கடந்த 2007 சனவரி 1 ஆம் திகதி முதல் இற்றைவரையும் மாதாந்த அடிப்படையிலும் கடந்த 5 வருடங்களில் வருடாந்த அடிப்படையிலும் அவர் கூறுவாரா?

(இ) கடந்த 6 வருடங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் செலவிடப்பட்ட தொகைகளை தேர்தல் தொகுதிகளுடன் வருடாந்த அடிப்படையிலும் அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0019/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்று உள்ளவாறு தேசிய லொத்தர் சபையில் உள்ள பணியாளர் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையையும்,

(ii) கடந்த 5 வருடங்களில் ஊழியர் ஒருவருக்கான செலவையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) விளம்பர வேலைகள் யாருக்கு வழங்கப்பட்டன என்பதையும்,

(ii) விளம்பரங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களையும் பயன்படுத்தப்பட்ட முகவர்களையும்

கடந்த 2007 சனவரி 1 ஆம் திகதி முதல் இற்றைவரையும் மாதாந்த அடிப்படையிலும் கடந்த 5 வருடங்களில் வருடாந்த அடிப்படையிலும் அவர் கூறுவாரா?

(இ) கடந்த 6 வருடங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் செலவிடப்பட்ட தொகைகளை தேர்தல் தொகுதிகளுடன் வருடாந்த அடிப்படையிலும் அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0020/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இன்று வரையான கடந்த 8 வருடங்களுக்கான -

(i) அபிவிருத்தி லொத்தர் சபையின் செயல்நிறைவேற்றத்தையும்,

(ii) செலவானது விற்பனையின் என்ன நூற்றுவீதம் என்பதையும்,

(iii) விளம்பரச்செலவு மொத்தச் செலவினங்களின் என்ன நூற்றுவீதம் என்பதையும்,

(iv) முகவர்களுக்குச் செலுத்திய தரகுப் பணத்தையும்,

(v) செலவினங்களின் நூற்றுவீதத்தையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அபிவிருத்தி லொத்தர் சபையால் நியமிக்கப்பட்ட முகவர்களின் எண்ணிக்கை,

(ii) விளம்பரம் முதலியவற்றிற்காக அவர்களுக்குச் செலுத்தப்பட்ட செலவு

என்பவற்றை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) உடனடி லொத்தரை (சுரண்டும் சீட்டுக்கள்) யும் சாதாரண சீட்டுக்களையும் அச்சிடுவது யாரென்பதையும்

(ii) அவ்வேலை கேள்விப்பத்திரங்கள் மூலமாக வழங்கப்பட்டனவா என்பதையும்,

(iii) முறையாக மேற்கொள்ளப்பட்ட இறுதிக் கேள்விப்பத்திரத்தின் திகதியையும்,

(iv) கேள்விப்பத்திர நடைமுறையின்றி வழங்கப்பட்ட அனைத்து அச்சிடல்களினதும் பெறுமதியை அவற்றின் திகதிகளோடும்,

(v) அதற்கான காரணத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) கடந்த 8 வருடங்களில் சனாதிபதி நிதியத்திற்கு வழங்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0331/ ’08

4.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின்வலு, சக்தி அமைச்சு அரசுக்குச் சொந்தமான கட்டிடமொன்றில் தாபிக்கப்பட்டுள்ளதா இன்றேல் தனிப்பட்ட உரிமையாளரொருவருக்குச் சொந்தமான கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) தனிப்பட்ட உரிமையாளரொருவருக்குச் சொந்தமான கட்டிடமாக இருக்கும் பட்சத்தில் அதன் உரிமையாளரின் பெயர் யாதென்பதையும்,

(iii) அக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் மாதாந்த வாடகை எவ்வளவு என்பதை யும்

அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(ஆ) (i) உரிய அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்கள் யாவையென்பதையும்,

(ii) இந் நிறுவனங்கள் எவ்விடங்களில் அமைந்துள்ளன என்பதையும்,

(iii) இந் நிறுவனங்கள் அமைந்துள்ள கட்டிடங்கள் அரசுக்குச் சொந்தமான வையா இன்றேல் தனிப்பட்ட உரிமையாளர்களுக்குச் சொந்தமானவையா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தனிப்பட்ட உரிமையாளர்களது கட்டிடங்களில் பேணப்பட்டு வருகின்ற நிறுவனங்கள் யாவை என்பதையும்,

(ii) அக்கட்டிடங்களின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்,

(iii) உரிய கட்டிடங்களின் பரப்பளவு மற்றும் மாதாந்த வாடகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0332/ ’08

5.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— நீர் வழங்கள், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர் வழங்கள், வடிகாலமைப்பு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்,

(ii) அந்நிறுவனங்களின் அமைவிடங்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி நிறுவனங்கள் இயங்குகின்ற கட்டிடங்கள் அரசுக்கு சொந்தமான வையா அல்லது தனியாருக்குச் சொந்தமானவையா என்பதையும்

அவர் இச்சபைக்கு கூறுவாரா?

(ஆ) (i) தனியாருக்குச் சொந்தமான கட்டிடங்களில் இயங்குகின்ற நிறுவனங்கள் யாவை என்பதையும்,

(ii) இக்கட்டிடங்களின் உரிமையாளர்கள் யாவரென்பதையும்,

(iii) சம்பந்தப்பட்ட கட்டிடங்களின் பரப்பளவு மற்றும் மாதாந்த வாடகை வெவ் வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0333/ '08

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்,

(ii) அந்நிறுவனங்களின் அமைவிடங்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி நிறுவனங்கள் இயங்குகின்ற கட்டிடங்கள் அரசுக்கு சொந்தமானவையா அல்லது தனியாருக்குச் சொந்தமானவையா என்பதையும்

அவர் இச்சபைக்கு கூறுவாரா?

(ஆ) (i) தனியாருக்குச் சொந்தமான கட்டிடங்களில் இயங்குகின்ற நிறுவனங்கள் யாவை என்பதையும்,

(ii) இக்கட்டிடங்களின் உரிமையாளர்கள் யாவரென்பதையும்,

(iii) சம்பந்தப்பட்ட கட்டிடங்களின் பரப்பளவு மற்றும் மாதாந்த வாடகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0387/ '08

7.

கௌரவ அசல ஜாகொடகே,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0388/ '08

8.

கௌரவ அசல ஜாகொடகே,— மீள்குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0389/ '08

9.

கௌரவ அசல ஜாகொடகே,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்படி அமைச்சரின் அமைச்சிற்கு அல்லது அதன் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அல்லது வேறு நிறுவனங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(ii) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்,

(iii) இவர்களில், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0436/ '08

10.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கருவாடு, மாசி மாத்திரமன்றி இந்நாட்டுக்கு மீனும் இறக்குமதி செய்யப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் கடந்த பத்தாண்டுகளில் ஒவ்வொரு வருடத்திலும் கொள்வனவு செய்த மீன் கிலோகிராம்களில் எண்ணிக்கை மற்றும் அதன் பெறுமதி எவ்வளவென்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) நாட்டிலுள்ள மேற்படி மீன் விற்பனை செய்கின்ற நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவை எந்த இடங்களில் இருக்கின்றன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0437/ '08

11.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மீன்பிடிப்பதில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு கம்பனிகளுக்கு நமது நாட்டில் துறைமுகங்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு அனுமதி வழங்குகின்ற போது, உடன்படிக்கை செய்யப்படுகின்றதா,

(ii) ஆமெனில், அவ்வுடன்படிக்கைகளில் அடங்கியுள்ள நிபந்தனைகள் யாவை,

(iii) அக்கம்பனிகளுக்கு எந்தெந்த துறைமுகத்தில் மீன்களை இறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(iv) மீன்களை இறக்கும் போது அவ்வெளிநாட்டு கம்பனிகள் இலங்கை கடற்றொழில், கூட்டுத்தாபனத்திற்கு எவ்வளவு மீன்களை வழங்க வேண்டும்.

(v) கடந்த 10 ஆண்டுகளில் மேற்படி கம்பனிகள் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய மீன்களின் அளவு எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0438/ '08

12.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள மீனவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) இவர்களுள் எரிபொருள் மானியம் பெறுபவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) நபரொருவருக்கு அவ்வாறு வழங்கப்படும் மானியத்தின் பணப்பெறுமதி எவ்வளவு என்பதையும்,

(iv) அது எவ்வளவு காலத்துக்கு வழங்கப்படுகின்றது என்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0452/ '08

13.

கௌரவ அநுருத்த பொல்கம்பல,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த 5 ஆண்டுகளில் வருடாந்தம் நுகரப்பட்ட மின் அலகுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த மின் அலகுகளின் அளவுக்கு இலங்கை மின்சார சபையினால் வழங்கப்பட்ட மின்அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இலங்கை மின்சார சபையுடன் இணைந்துள்ள நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட மின்அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) தனியார் கம்பனிகளின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட மின் அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) தனியார் கம்பனிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்,

மேற்படி 5 ஆண்டுகளுக்கும் வருட வாரியாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) நாட்டில் உள்ள மின் உற்பத்தி தனியார் கம்பனிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி கம்பனிகளின் முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி கம்பனிகள் உற்பத்தி செய்கின்ற மின் அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(iv) தற்போது நாட்டில் நுகரப்படுகின்ற மின் அலகுகளின் அளவில் எவ்வளவு மின் அலகுகள் மேற்படி கம்பனிகளால் வழங்கப்படுகின்றதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0453/ '08

14.

கௌரவ அநுருத்த பொல்கம்பல,— பெற்றோலியம், பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சப்புகஸ்கந்த கொலன்னாவ எண்ணெய் குழாய்த் தொகுதியின் புனரமைப்பு நடவடிக்கைகள் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கம்பனி தெரிவு செய்யப்படும் போது பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த தகைமைகள் யாவையென்பதையும் ,

(ii) மேற்படி கம்பனி பகிரங்க கேள்விப்பத்திரக் கோரலின் மூலம் தெரிவு செய்யப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி குழாய்த் தொகுதியை புனரமைப்பு செய்வதற்காக கேள்விப்பத்திரம் மூலம் விண்ணப்பித்த கம்பனிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அக் கம்பனிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) ஒவ்வொரு கம்பனியினாலும் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களில் காணப் பட்ட விலைகள் பற்றிய விபரமான அறிக்கையொன்றை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## **பிரேரணை முன்னறிவித்தல்**

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 8 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 3.30 மணிக்கு 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் பந்தி தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— உற்பத்திவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்திவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரால் உற்பத்திவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 மார்ச் மாதம் 14 ஆந் திகதிய 1540/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 24(ஈ)(2) ஆம் பிரிவின் கீழ் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் இறைவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 22 ஆந் திகதிய 1546/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*3.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 23 (1) (இ) ஆம் பிரிவின் கீழ் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் இறைவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 22 ஆந் திகதிய 1546/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*4.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு

இறைவரிச் சட்டத்தின் 212 ஆம் பிரிவின் கீழ் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் இறைவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 22 ஆந் திகதிய 1546/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*5.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 22 ஆந் திகதிய 1546/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*6.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் முத்திரைக் கட்டண தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 22 ஆந் திகதிய 1546/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*7.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— பொருளாதாரச் சேவைக்கட்டணச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவைக்கட்டணச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் பொருளாதாரச் சேவைக்கட்டணம் தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 22 ஆந் திகதிய 1546/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*8

பிரதம அமைச்சரும், உள்ளக நிர்வாக அமைச்சரும், பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— இறக்குமதிகள் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் ,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(3), 14 மற்றும் 20 ஆம் பிரிவுகளின் அரிசி ஏற்றுமதிக்காக குறைந்த விலையொன்று விதிக்கப்பட்டு நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 ஜூன் மாதம் 09 ஆந் திகதிய 1553/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தும் 2008.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*9.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத் தின் கீழான தீர்மானம் (இல.1),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச்

சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 26 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 26

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 25002 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் “பிற அரசாங்கத்தின் சார்பில் கொடுப்பனவுக்கான முற் பணங்கள்” — அரச கணக்குகள் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப் பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப் பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூ.5,300,000 இலிருந்து ரூ. 4,900,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.02.22
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*10.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 35 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 35

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம்

அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "அரசாங்கத் தொழிற்சாலை செய்து முடிக்கப்பட்ட வேலை முற்பணக்கணக்கு" — அரசாங்கத் தொழிற்சாலை என்பதற்கெதிராக குறித்துரைக் கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூ.140,000,000 இலிருந்து ரூ. 275,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.04.21
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*11.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.3),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்ட த்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங் கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 36 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 36

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "அரசாங்கத் தொழிற்சாலை பண்டகசாலை முற்பணக் கணக்கு" — அரசாங்கத் தொழிற்சாலை என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக் கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூ. 45,000,000 இலிருந்து ரூ. 135,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.04.21
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*12.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத் தின் கீழான தீர்மானம் (இல.4),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 38 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 38

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 01602 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துரைகளை விசாரிப் பதற்கான ஆணைக்குழு — இலஞ்சம் வாங்குபவர்களை கைது செய்வதற்கான முற்பணக்கணக்கு" என்பதற்கெதிராக குறித்து ரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப் பட்ட செலவின் உச்ச எல்லை — ரூ.3,000,000 இலிருந்து ரூ. 6,500,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூ. 800,000 இலிருந்து ரூ. 2,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.04.30
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*13.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத் தின் கீழான தீர்மானம் (இல.5),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 13 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 13

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 23202 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "சிறைச்சாலைகள் திணைக்களத்தின் கைத் தொழில், விவசாய முற்பணக் கணக்குகள்" — சிறைச்சாலைத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித் துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப் பட்ட செலவின் உச்ச எல்லை — ரூ.65,000,000 இலிருந்து ரூ. 75,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூ. 66,000,000 இலிருந்து ரூ. 76,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — ரூ. 30,000,000 இலிருந்து ரூ. 31,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.05.05
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*14.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத் தின் கீழான தீர்மானம் (இல.6),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 39 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின்
## 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 39

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "அச்சிடுதல், பிரச்சாரம் மற்றும் வினியோகம்" — கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூ.1,300,000,000 இலிருந்து ரூ. 2,398,400,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூ. 1,300,000,000 இலிருந்து ரூ. 2,264,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — ரூ. 600,000,000 இலிருந்து ரூ. 800,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல்V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூ.150,000,000 இலிருந்து ரூ.1,490, 000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.05.16
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*15.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச்சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 7),— 2006ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08 ஆம் பிரிவினால் தமக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள் இத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

(இக்கட்டளைகள் 2008.12.31 ஆம் திகதிவரை மட்டுமே செல்லுபடியாகும்)

# அட்டவணை

*2007 நிதி ஆண்டு தொடர்பில் 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சினால் அதிகாரமளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை.*

| தொடர் இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | பந்தி ii இல் உள்ள செலவினத்தின் உச்ச எல்லைகள் | | பந்தி iii இல் உள்ள தொகைகளின் இழிவெல்லைகள் | | பந்தி iv இல் உள்ள பற்று மீதியின் உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இருந்து | ஆக | இருந்து | ஆக | இருந்து | ஆக | |
| 1. | பொலிஸ் திணைக்களம் | 22501 | 1,225,000,000 | 1,145,000,000 | 698,160,000 | 663,160,000 | 3,150,000,000 | 2,918,000,000 | 1 |
| 2. | பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் அமைச்சர் | 10301 | 42,000,000 | 122,000,000 | 17,880,000 | 52,880,000 | 150,000,000 | 390,000,000 | 2 |
| 3. | பதிவாளர் நாயகம் திணைக்களம் | 25401 | - | - | - | - | 70,000,000 | 135,000,000 | 5 |
| 4. | மாவட்டச் செயலாளர், கச்சேரி யாழ்ப்பாணம் | 26401 | - | - | 15,720,000 | 14,000,000 | - | - | 6 |
| 5. | விவசாயத் திணைக்களம் | 28501 | - | - | 97,320,000 | 86,000,000 | - | - | 7 |
| 6. | பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் | 15501 | - | - | 6,120,000 | 1,500,000 | - | - | 8 |
| 7. | வனவளத் திணைக்களம் | 28301 | - | - | 28,920,000 | 23,100,000 | - | - | 9 |
| 8. | காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் | 15301 | - | - | 840,000 | 5,600,000 | 14,000,000 | 25,962,000 | 10 |
| 9. | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | 28901 | - | - | 13,560,000 | 13,200,000 | - | - | 11 |
| 10. | கல்வி அமைச்சர் | 12601 | - | - | 516,000,000 | 475,000,000 | - | - | 12 |
| 11. | மாவட்டச் செயலகம், காலி | 26101 | - | - | 44,520,000 | 33,000,000 | - | - | 14 |
| 12. | இலங்கை இராணுவம் | 22201 | - | - | 921,000,000 | 800,000,000 | - | - | 15 |
| 13. | இலங்கை புகையிரத திணைக்களம் | 30601 | - | - | - | - | 1,765,000,000 | 1,865,000,000 | 16 |
| 14. | நில அளவைத் திணைக்களம் | 28801 | - | - | 78,120,000 | 72,000,000 | - | - | 17 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15. | இளஞர் விவகார அமைச்சு | 15601 | - | - | - | - | 6,000,000 | 18,000,000 | 18 |
| 16. | பொலிஸ் திணைக்களம் | 22501 | - | - | 663,160,000 | 600,000,000 | - | - | 19 |
| 17. | உள்நாட்டலுவல்கள் அமைச்சர் | 14701 | - | - | - | - | 8,000,000 | 12,000,000 | 20 |
| 18. | மாவட்டச் செயலகம் , அநுராதபுரம் | 27401 | - | - | 31,920,000 | 25,000,000 | - | - | 21 |
| 19. | தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் | 13101 | - | - | 1,000,000 | 200,000 | - | - | 22 |
| 20. | இலங்கை கடற்படை | 22301 | - | - | 208,920,000 | 150,000,000 | - | - | 23 |
| 21. | மாவட்டச் செயலகம், அம்பாறை | 27001 | - | - | - | - | 65,000,000 | 129,000,000 | 24 |
| 22. | மாவட்டச் செயலகம், மாத்தறை | 26201 | - | - | 30,780,000 | 29,000,000 | - | - | 25 |
| 23. | உணவு ஆணையாளர் திணைக்களம் | 30001 | - | - | 8,400,000 | 7,000,000 | - | - | 27 |
| 24. | இலங்கை வான்படை | 22401 | - | - | 235,560,000 | 220,000,000 | - | - | 28 |
| 25. | வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் | 24401 | - | - | - | - | 4,000,000 | 6,500,000 | 29 |
| 26. | கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி அமைச்சர் | 15901 | - | - | - | - | 50,000,000 | 65,000,000 | 30 |
| 27. | தெங்கு அபிவிருத்தி அமைச்சர் | 14101 | - | - | 840,000 | 500,000 | - | - | 31 |
| 28. | பொதுமக்கள் பாதுகாப்பு திணைக்களம் | 32001 | - | - | 192,000 | 96,000 | - | - | 32 |

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ

நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008 .05. 09

கொழும்பு - 01

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது)

*16.

சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 160, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங் கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் பதினெட்டுக் கோடியே எண்பது இலட்சம் (ரூபா 188,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு 160 — | சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சு | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் | | |
| கருத்திட்டம் 3 (24) | — வனவளங்கள் முகாமைத்துவ கருத்திட்டம் | | |
| | மீண்டுவரும் செலவினம் | ரூ. | |
| | மூலதனச் செலவினம் | ரூ. | 188,000,000 |
| | மொத்தம் | ரூ. | **188,000,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2008, யூன் மாதம் 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

2008.05.16
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*17.

சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 160, நிகழ்ச்சித்திட்டம் 01,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங் கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் நூற்றி முப்பது மில்லியன் (ரூபா 130,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு 160 | — | சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சு | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் 01 | — | செயல்முறைச் செயற்பாடுகள் | |
| கருத்திட்டம் 02 | — | நிருவாகமும் தாபனச் செலவுகளும் | |
| செலவு விடயம் 2104 | — | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | |
| | | மீண்டுவரும் செலவினம் | —— |
| | | மூலதனச் செலவினம் | 12,700,000 |
| | | மொத்தம் | 12,700,000 |
| செலவு விடயம் 2105 | — | காணி, காணி அபிவிருத்தி | |
| | | மீண்டுவரும் செலவினம் | —— |
| | | மூலதனச் செலவினம் | 117,300,000 |
| | | மொத்தம் | **117,300,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2008, யூன் மாதம் 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப்பார்க்க. இலக்கம் 01 குறைநிரப்பு மதிப்பீட்டின் மொத்தம் ரூபா 188,000,000.

*18.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*19.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

பாடசாலை ஆசிரியர் ஓய்வூதிய(திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*22.

கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*23.

சீன வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்,— இரண்டாம் மதிப்பீடு

*24.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*25.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*26.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*27.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*28.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*29.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*30.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*31.

பிரதம அமைச்சரும், உள்ளக நிர்வாக அமைச்சரும், பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறிவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்பு ரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 சனவரி மாதம் 09 ஆம் திகதிய 1531/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டதும் 2008.03.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக் கப்படுமாக.

*32.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான “2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை (தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்” அங்கீகரிக்கப்படுமாக.

*33.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக்

கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரில் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*34.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*35.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*36.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— காவற்றுதுப் பணிகள் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 1981 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, காவற்றுதுப் பணிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வெளிநாட்டலுவல்கள் அமைச்சரால் காவற்றுதுப் பணிகளுக்கான அறவீடு தொடர்பில் ஆக்கப்பட்டு 2007 யூன் மாதம் 11 ஆந் திகதிய 1501/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

*37.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும், பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேர ணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணை யினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்படவேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*38.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 2),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற

தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*39.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும், படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியமும், படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*40.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும், படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , தேசிய பொலிசு ஆணைக்குழுவின், தவிளாசருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும், படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*41.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் சம்பளங்களும், படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும், படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*42.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் சம்பளங்களும், படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும், படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*43.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— இலங்கை அரச பொறி யியல் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை - 2004,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின 14(3) ஆம் பிரிவின் கீழ், 2006.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டிற்கான இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை, ஐந்தொகை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வீடமைப்பு, நிர்மாணத்துறை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

*44.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2005,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் கீழ், 2006.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டிற்கான நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

45.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

றங்கா கலை நிறுவனத்தைக் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.